## 22. தலைப்பு 20 – தேர்தல்கள் திணைக்களம்

### 22.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக் கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | கணனி, உப பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை. |

### 22.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

சேவையிலிருந்து விலக்கப்பட்ட மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்தும் சேவை விலகிய நான்கு உத்தியோகத்தர்களிடமிருந்தும் அறவிட வேண்டிய முறையே ரூபா 178,049 மற்றும் ரூபா 254,771 என்பன 2015 மார்ச் 31 ஆந் திகதியளவிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 22.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### வருடாந்தப் பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

2014 ஆம் ஆண்டிற்குரிய மெய்மைய்யாய்வுச் சபை அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட தலைமை அலுவலகத்தினதும் மாத்தறை அலுவலகத்தினதும் முறையே 08 விடயங்கள் மற்றும் 01 விடயத்தினது பற்றாக்குறை தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 22.4 இணங்காமை

----------------------------

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமை**

----------------------------------------------------------------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்த சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணமங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 763(ஈ) | - | இலகுவானதாகவும் தாமதமின்றியும் சரி பிழை பார்க்கக் கூடிய வகையில் தலைமை அலுவலகத்தின் களஞ்சியத்தில் காணப்பட்ட பொருட்கள் முறைப்படி தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) 2014 சனவரி 29 ஆந் திகதிய பீ.சீ.ஈ/2013/4 ஆம் இலக்க தேர்தல்கள் ஆணையாளரின் சுற்றறிக்கை | 453,264 | தேர்தல் கடமைகளுக்காக கொழும்பு மாவட்டத்தின் அலுவலகத்தினால் உணவு கொள்வனவு செய்யும்போது தெரிவு செய்யப்பட்ட மூன்று கேள்விதாரர்களுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்க வில்லை. |

**22.5 வங்கிக் கணக்குச் செயற்பாடுகளில் உள்ள குறைபாடு**

-------------------------------------------------------------------------------------------

**சீராக்கப்பட வேண்டிய மீதி**

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தேர்தல்கள் திணைக்களத்தால் 2014 திசெம்பர் மாதத்திற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத காலாவதியான ரூபா 111,472 கூட்டுத்

தொகையான 101 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 395(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**22.6 சர்ச்சசைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

---

2014 ஒக்தோபர் 08 ஆந் திகதியன்று கம்பஹா தேர்தல் அலுவலகத்தின் கராஜை நிர்மாணித்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது 931 சதுர அடி அளவிற்கு Interlocking Paving Blocks போடுவதற்காக ரூபா 195,510 செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், 790.41 சதுர அடி அளவிற்கு மாத்திரம் கல் போடப்பட்டமையால் ரூபா 29,610 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**22.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---

**அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் நடைமுறைகளைப் பின்பற்றாமை**

---

தேர்தல்கள் செயலகத்தின் இரண்டாவது மாடியில் கணனி பிரிவு மற்றும் தேர்தல் ஆணையாளரின் இணைப்புச் செயலாளர் அலுவலகம் என்பவற்றுக்கு அலுமினியத்தைப் பயன்படுத்தி அவற்றை வெவ்வேறு கூறாக்கும் வேலைகளைப் பரீட்சித்தபோது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் ரூபா 250,000 இனை விஞ்சுகின்ற வேலைகளுக்கான ஒப்பந்தமொன்று தொடர்பில் முறையான உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட வேண்டியிருந்த போதிலும், மேற்கூறப்பட்ட வேலைக்காக அவ்வாறு உடன்படிக்கையில் கைச்சாத்திடாமல் ஒப்பந்தகாரருக்கு ரூபா 1,076,768 செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.8 வழிகாட்டியின் பிரகாரம் வேலைக்கான ஏதாவதொரு ஒப்பந்தத்தை நிறைவேற்றும்போது, ஒப்பந்தகாரரினால் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் மீறப்படுமாயின் கொள்வனவு நிறுவனத்தைப் பாதுகாப்பதற்காக மதிப்பிடப்பட்ட ஒப்பந்தப் பெறுமதியில் 5 சதவீதத்திற்குக் குறையாத செயலாற்றல் காப்பீடு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், ரூபா 53,838 பெறுமதியான செயலாற்றல் காப்பீடு திணைக்களத்தால் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.3.1(அ) வழிகாட்டியின் பிரகாரம் சகல தொடர்புடைய செலவுகளையும் உள்ளடக்கிய மொத்தக் கிரய மதிப்பீடு கொள்வனவு நிறுவனத்தினால் தயாரிக்கப்பட வேண்டியிருந்த

போதிலும், மேற்கூறப்பட்ட வேலைகளுக்கான மொத்தக் கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 22.8 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளவாறான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 42 | 36 | 06 |
| (ii) | மூன்றாம் நிலை | 17 | 06 | 11 |
| (iii) | இரண்டாம் நிலை | 479 | 370 | 109 |
| (iv) | ஆரம்ப நிலை | 161 | 145 | 16 |
| | மொத்தம் | 699 | 557 | 142 |

மீளாய்வாண்டு இறுதியளவிலும் 142 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.